# 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபைச் சட்டம்

2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழும், குறித்த சட்டத்தின் 36 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (2) ஆம் உப-பிரிவின் (ஈ) மற்றும் (உ) ஆகிய பந்திகளின் கீழும் மின்வலு சக்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

மின்வலு சக்தி அமைச்சர்

கொழும்பு
2013 . ............................

**ஒழுங்குவிதிகள்**

1. இந்த ஒழுங்குவிதிகள் "2012 இன் 1 ஆம் இலக்க மின்னுபகரண (கூரை மின்விசிறிகள்) செயல்திறன் நியமங்கள் தொடர்பான ஒழுங்குவிதிகள்" என அழைக்கப்படுமாக.

2. SLS 1600:2011 என்ற குறிப்பீடு செய்யப்பட்ட இலங்கை நியமங்களை அனுசரிக்காத இதன் கீழ்காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒழுங்குறுத்திகளுடைய குறிப்பீடு செய்யப்பட்ட கூரை மின்விசிறிகளை எந்த ஒரு நபரும் இலங்கைக்கு இறக்குமதி செய்ய அல்லது இலங்கையில் உற்பத்தி செய்யக்கூடாது.

3. அதையொத்த மாதிரி கூரை மின்விசிறிக்கான SLS 1600:2011 என்ற நியமத்தினது 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு, இறக்குமதி செய்யப்பட்ட அல்லது உற்பத்தி செய்யப்பட்ட கூரை மின்விசிறகள், குறித்தொதுக்கப்பட்ட நட்சத்திரக் கணீப்பீட்டை அனுசரிக்கின்றன என்பதை உறுதிப்படுத்துகின்ற இலங்கை நியமங்கள் நிறுவகத்தினால் விநியோகிக்கப்பட்ட ஒரு சான்றிதழை அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு ஏதாவது ஒரு கூரை மின்விசிறியை இறக்குமதி செய்யும் அல்லது உற்பத்தி செய்யும் ஒரு நபரை சமர்ப்பிக்குமாறு தேவைப்படுத்த இந்த அதிகார சபைக்கு அதிகாரத் தத்துவமுண்டு. அத்தகயை சான்றிதழ் சான்றாக அனுமதிக்கக்கூடியதாகவும் அதே நேரம் அதில் அடங்கிய விடயங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கும்.

4. குறித்த அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதாவது ஒரு கூரை மின்விசிறியை இறக்குமதி செய்யும் அல்லது உற்பத்தி செய்யும் ஒவ்வொரு நபரும், SLS 1600:2011 என்ற நியமத்தினது 8 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அமைப்பு, பரிமாணம் மற்றும் அளவு என்பவற்றை அனுசரிக்கின்ற மற்றும் ஏற்றுக்கொள்ளத்தகுந்த நட்சத்திரக் கணிப்பீட்டை வெளிப்படுத்தும் ஒரு சக்தி முத்திரையை அந்தக் கூரை மின்விசிறி அடைக்கப்பட்டிருக்கும் உறையில், சுருளில் அல்லது பெட்டியில் பொறிப்பதற்குத் தேவைப்படுத்தப்படுவார். அவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்ற அந்த நட்சத்திரக் கணிப்பீடானது வெளிப் படுத்தப்பட்ட அந்தக் கணிப்பீட்டின் செவ்வைத்தன்மையை உறுதிப் படுத்துகின்ற இலங்கை நியமங்கள் நிறுவகத்தினால் விநியோகிக்கப் பட்ட ஒரு சான்றிதழினால் சான்றுபடுத்தப்படுத்தப்படுதல் வேண்டும்.

5. உற்பத்திப் பொருள் அடங்கிய உறைக்கு அல்லது சுருளுக்கு அல்லது பெட்டிக்கு இந்த ஒழுங்குவிதிகளின் 4 ஆம் வாசகத்தினால் விதிக்கப்பட்ட தேவைப்பாட்டை அனுசரிக்காத ஒரு சக்தி முத்திரை இடப்பட்டுள்ள, இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டலென்ன அல்லது இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்டாலென்ன எந்த ஒரு நபரும், அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறு அத்தகைய ஏதாவது ஒரு மின்விசிறியை களஞ்சியப்படுத்த, காட்சிப்படுத்த, சில்லறையாக அல்லது மொத்தமாக விற்பனை செய்ய, விற்பனைக்காக வழங்க அல்லது பகிர்ந்தளிக்கக் கூடாது.

6. குறித்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க இந்த ஒழுங்குவிதிகளின் 2 மற்றும் / 4 மற்றும் / 5 ஆகிய வாசகங்களினால் விதிக்கப்பட்ட தேவைப்பாடுகளை ஒரு நபர் அனுசரிக்கத் தவறிய குற்றத்தின் பேரில், அந்தக் குற்றத்திற்காக விதிக்கப்பட்ட தண்டத்திற்கு மேலதிகமாக அத்தகைய தண்டத்தை விதித்து, அந்தக் குற்றத்துடன் சம்பந்தப்பட்ட குறித்த கூரை மின்விசிறிகளை அகற்றுவதற்கான அல்லது அழிப்பதற்கான அல்லது அத்தகைய அகற்றல் அல்லது அழித்தல் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைக்கான ஒரு கட்டளையைப் பிறப்பிக்குமாறு நீதிமன்றத்தைக் கோருவதற்கு இந்த அதிகார சபை உரித்தைக் கொண்டிருக்கும். இந்த அதிகார சபை, சொல்லப்பட்ட அந்தக் கட்டளையானது அந்த அகற்றல் அல்லது அழித்தல் தொடர்பில் ஏற்பட்ட ஆகுசெலவு, குற்றம் புரிந்த அந்த நபரினால் பொறுப்பேற்கப்படுதல் வேண்டும் என்ற ஏற்பாட்டை வழங்க வேண்டும் எனவும் கோரலாம்.

**7.** இந்த ஒழுங்குவிதிகளில்:-

"சட்டம்" என்பது 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டம் எனப் பொருள்படும்.

"அதிகார சபை" என்பது 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சபை எனப் பொருள்படும்.

"இலங்கை நியமங்கள் நிறுவகம்" என்பது 1984 இன் 6 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவகச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நியமங்கள் நிறுவகம் எனப் பொருள்படும்.

**அட்டவணை**

*1400 மிமீ வெளிச் சுற்றளவுடைய இரண்டு அல்லது அதற்கு அதிகமான தட்டுக்களுடன் ஆகக்குறைந்தது ஐந்து ஒழுங்குறுத்தி அமைப்புகளைக் கொண்ட கூரை மின்விசிறிகளே* இந்த ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்பட்ட கூரை மின்விசி*றி*களாகும்.